# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 159/6 — 1975 අප්‍රේල් 17 වැනි බ්‍රහස්පතින්දා — 1975.04.17

159/6 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

கொ. டி. பிசி/4 விலைக்கட்டளை

கோதுமை மா

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 (2) ம் பிரிவினாலும் கொழும்பு பரிபாலன மாவட்ட பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு டங்கன் வில்பெறெட் த அல்விஸ் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1975 ம் ஆண்டு மார்ச் 17 ம் திகதி வெளிவந்த 155/2 ம் இலக்க இலங்கைக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பீசி/3 ம் இலக்க 1975 ம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ந் திகதி கொண்ட விலைக்கட்டளையை 1975.03.31 தொடக்கம் எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடு இருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே 1975.03.31 தொடக்கம் 1 ம் பந்தியில் குறிக்கப்பட்டிருக்கும் இடங்களில் 112 நிகர இருத்தலின் ஆகக்கூடிய விலையாகுமெனவும் நிகர இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எத்தொகையான எவ்வித கோதுமை மாவையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 112 நிகர இருத்தல் நிறையைக் கொண்ட அல்லது அதற்குக் கூடிய தொகையையோ ஒரு முறையில் விற்பது மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) 112 நிகர இருத்தல் நிறைக்குக் குறைவான எத்தொகையையும் பாவிப்பாளருக்காக விற்கும் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) " கோதுமை மா " என்பது கோதுமை மாவும் சோளம் மாவும் சேர்ந்த கலவை மா ;

(ஈ) 112 நிகர இருத்தலுக்கு மேலான அல்லது அத்தொகைக்குக் குறைந்த மாவை மொத்தமாக விற்குமிடத்து அதன் மொத்த விலையை 112 நிகர இருத்தல் மொத்த விலையின் சராசரியில் கணிக்கப்பட வேண்டும் ;

(4) கோதுமை மாவுடன் சோளம் மாவைத் தவிர்ந்த ஏனைய எப்பொருள்களுடனும் கலந்து விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகின்றேன் ;

(5) சோளம் மாவையும் கோதுமை மாவையும் கலந்து விற்கும் கலவையில் பத்து சத வீதம் அல்லது அதற்குட்பட்ட சோளம் மாத்திரமே அக்கலவையில் இருக்கலாமென ஆஞ்ஞையிடுகின்றேன் ;

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் விபரிக்கப்பட்டிருக்கும் கோதுமை மாவை தமது வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த கொள்கலத்தில் குறிப்பிட்ட கோதுமை மாவின் சிறுதொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென்றும் கட்டளையிடுகின்றேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் கோதுமை மாவை விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென்று கட்டளையிடுகின்றேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு ", என்பது எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும் என்றும் கட்டளையிடுகின்றேன் ;

(9) ஏதாவது கோதுமை மா விற்கும்பொழுது இந்தக் கட்டளையில் விதிக்கப்பட்ட மிகக் கூடுதலான விலைகள் அப்பொருளைச் சுற்றிக் கொடுக்கும் பொருள் அல்லது கொள்கலத்தின் விலைகளையும் அடங்கியிருக்குமெனக் கட்டளையிடுகின்றேன்.

1975 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதி மாலை 3 மணிக்குக் கொழும்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

டங்கன் வில்பிறட் த அல்விஸ்,
பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
கொழும்பு பரிபாலன மாவட்டம்.

அட்டவணை

கோதுமை மா

| பந்தி (1)<br>எல்லைகள் | பந்தி (2)<br>112 இருத்தல் நிறையுள்ள மாவின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | பந்தி (3)<br>ஒரு இருத்தல் மாவின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. பீரிகம காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) பீரிகம .. .. .. .. | 122 66 | |
| (ஆ) பள்ளேவெல .. .. .. .. | 122 66 | 1 11 |
| (இ) மேற்குறிப்பிடாப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 66 | |
| 2. நீர்கொழும்பு காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) நீர்கொழும்பு .. .. .. .. | 122 50 | |
| (ஆ) சீதுவ .. .. .. .. | 122 50 | |
| (இ) கட்டான .. .. .. .. | 122 54 | 1 11 |
| (ஈ) மேற் குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 52 | |
| 3. மினுவாங்கொடை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : | | |
| (அ) மினுவாங்கொடை .. .. .. .. | 122 49 | |
| (ஆ) மாபோடலே .. .. .. .. | 122 49 | |
| (இ) உடுகம்பொல .. .. .. .. | 122 49 | 1 11 |
| (ஈ) கெஹெலெல்ல .. .. .. .. | 122 54 | |
| (உ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 49 | |
| 4. திவுலப்பிட்டிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு : | | |
| (அ) திவுலப்பிட்டிய .. .. .. .. | 122 54 | |
| (ஆ) கொட்டெனியாவ .. .. .. .. | 122 66 | 1 11 |
| (இ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 66 | |
| 5. அத்தனகலை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : | | |
| (அ) வெயாங்கொட–பெம்முல்ல .. .. .. | 122 50 | |
| (ஆ) நித்தம்புவ .. .. .. .. | 122 50 | 1 11 |
| (இ) ஹுருப்பொல .. .. .. .. | 122 58 | |
| (ஈ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 66 | |
| 6. கம்பஹா உதவி அரசாங்க அதிபர் பிரிவு : | | |
| (அ) கலஹிட்டியாவ .. .. .. .. | 122 08 | |
| (ஆ) ஹென்ரத்கொட .. .. .. .. | 122 50 | |
| (இ) கம்பஹா .. .. .. .. | 122 50 | 1 11 |
| (ஈ) யக்கல .. .. .. .. | 122 50 | |
| (உ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 52 | |
| 7. வகே உதவி அரசாங்க அதிபர் பிரிவு : | | |
| (அ) தொம்பே .. .. .. .. | 122 80 | |
| (ஆ) கேரகல .. .. .. .. | 122 80 | |
| (இ) பூகொடை .. .. .. .. | 122 78 | 1 11 |
| (ஈ) கிரிந்தவெல .. .. .. .. | 122 64 | |
| (உ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 66 | |
| கெலனிய/கடவத்தை காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) தலுகம .. .. .. .. | 122 10 | |
| (ஆ) கெலனிய .. .. .. .. | 122 16 | 1 11 |
| (இ) பியகம .. .. .. .. | 122 16 | |
| (ஈ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 31 | |
| 9. கொலன்னாவை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : | | |
| (அ) கொலன்னாவை .. .. .. .. | 121 89 | |
| (ஆ) கொட்டிகாவத்த .. .. .. .. | 121 89 | 1 11 |
| (இ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 121 89 | |
| 10. நுகேகொடை உதவி அரசாங்க அதிபர் பிரிவு : | | |
| (அ) கோட்டே .. .. .. .. | 121 81 | |
| (ஆ) மகரகம .. .. .. .. | 121 83 | 1 11 |
| (இ) தெகிவளை–கல்கிசை .. .. .. .. | 121 81 | |
| (ஈ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 121 83 | |
| 11. ஹன்வெல்ல காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) பகத்கம .. .. .. .. | 122 45 | |
| (ஆ) ஹன்வெல்ல .. .. .. .. | 122 45 | |
| (இ) அவிசாவலை .. .. .. .. | 122 65 | 1 11 |
| (ஈ) பாதுக்க .. .. .. .. | 122 45 | |
| (உ) வகே .. .. .. .. | 122 53 | |
| (எ) மேற் குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 57 | |

| பந்தி (1)<br>எல்லைகள் | பந்தி (2)<br>112 இருத்தல் நிறையுள்ள மாவின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | பந்தி (3)<br>ஒரு இருத்தல் மாவின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| **12.** ஹோமகம காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) கடுவெல .. .. .. .. | 122 44 | |
| (ஆ) பத்தரமுல்ல .. .. .. .. | 122 10 | 1 11 |
| (இ) ஹோமகம .. .. .. .. | 122 32 | |
| (ஈ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 40 | |
| **13.** வத்தளை காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) வெளிசற–ருகம .. .. .. .. | [illegible] | |
| (ஆ) ஹெந்தலை .. .. .. .. | 122 08 | |
| (இ) போபிற்றிய .. .. .. .. | 122 25 | 1 11 |
| (ஈ) வத்தளை .. .. .. .. | 122 08 | |
| (உ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 17 | |
| **14.** ஜா-எல காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) தண்டுகம்பேருவ .. .. .. .. | 122 26 | |
| (ஆ) கந்தானை, ஜா-எல .. .. .. .. | 122 08 | 1 11 |
| (இ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 17 | |
| **15.** பிலியந்தலை காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) மொறட்டுவ .. .. .. .. | 121 87 | |
| (ஆ) பிலியந்தலை .. .. .. .. | 121 87 | |
| (இ) பொல்கஸ்ஓவிற்ற .. .. .. .. | 121 93 | 1 11 |
| (ஈ) போக்குந்தர .. .. .. .. | 121 87 | |
| (உ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 121 90 | |
| **16.** மகற காரியாதிகாரியின் பிரிவு : | | |
| (அ) மகற .. .. .. .. | 122 10 | |
| (ஆ) நாறன்வெலை .. .. .. .. | 122 55 | 1 11 |
| (இ) ஊறுவெல்லபேறுவை .. .. .. .. | 122 55 | |
| (ஈ) மேற்குறிப்பிடப்படாத வேறு எந்த இடத்திலும் .. .. | 122 55 | |

குறிப்பு —இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்டுள்ள விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

4–514

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப் பெற்றது.